بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.்.பா**

**08 June 2018 (23 Ramadan 1439 A H)**

# "THE LAILATUL QADR & IMPORTANCE OF ZAKAAT"

## "லைலத்துல் கதீர் மற்றும் ஜக்காத்தின் முக்கியத்துவம்"



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுஸும், அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

திருக் குர் - ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்,

1. **அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருபெயரால்,**

2. நிச்சயமாக தாம் இந்த (குர் ஆனை) தீர்ப்பிற்குரிய இரவில் இறக்கினோம்.
3. தீர்ப்பிற்குரிய இரவு என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
4. தீர்ப்புக்குரிய இரவு ஆயிரம் மாதங்களை விட மிகச் சிறந்ததாகும்.
5. அதில் வானவர்களும் அந்த ஆன்மாவும் அனைத்து விவகாரங்கள் தொடர்பாக தாங்கள் இறைவனின் கட்டளையுடன் இறங்குகின்றனர்.
6. விடியற்காலை தோன்றும் வரை சாத்தியமானதாகவே இருக்கும்.

(97:1–6)

ரமலான் மாதம் ஆரம்பித்தவுடன் முஸ்லீம்கள் வணக்க வழிபாடுகளை அல்லாஹ்வைப் பிரியப்படுத்துவதற்காக மிகுந்த உற்சாகத்துடன் துவங்கிகொள்கின்றனர். அம்மாதத்தில் கட்டாயமான இறைவணக்க வழிபாடுகளும், சுன்னத்தான வழிபாடுகளும் மற்றும் நபிலான வழிபாடுகளும் உட்படுகின்றது. மசூதிகள் வணக்க வழிபாட்டாளர்களைக் கொண்டு நிரம்புகின்றது. அல்ஹம்மதுலில்லாஹ்! ஆனால் இன்ஷா அல்லாஹ்! ரமலானுக்கு பிறகும் இந்நிலையை அதைப்போன்றே நிலைநாட்டி வர வேண்டும். இந்த அருளுக்குரிய மாதத்தில் ஏழைகள் மற்றும் அடைக்கலமற்றவர்களுக்கு உதவி புரிவதற்கான எண்ணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காரியமாகும்.

## லைலத்துல் கதீர்

## THE LAILATUL – QADR

இம்மாதத்தில் லைலத்துல் கதீர் எனும் இரவும் நமக்கு கிடைக்கின்றது. நமது அன்புகுரிய தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் ஒரு திருமொழிப்படி அவ்விரவில் புரியும் இறை வழிபாடுகளுக்கு ஆயிரம் மாதம் புரியும் இறை வழிபாடுகளை விட வெகுமதிகள் உள்ளன. இவை எல்லாவற்றையும் நாம் கணக்கிட்டுப் பார்த்தால் அதாவது நம் எண்ணத்தில் எந்த தவறும் நிகழாமலிருந்தால், அதனை 83 வருடமும், 4 மாதமும் ஆக கணக்கிட்டுக் கொள்ளலாம். இன்றைய மனிதனின் ஆயுட்காலத்தைக் கருத்தில் கொண்டால் அவன் தனது வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் இந்த அளவிற்கு வெகுமதிகளை சேர்க்க ஒரு போதும் முடியாது. இரவு பகலின்றி முயற்சிகளில் அவன் ஈடுபட்டால் கூட!

அந்த இரவுக்குப் பின் ஒரு கதையுள்ளது. சம்சூண் (ரலி) என்ற பெயரைக் கொண்ட ஒருவர், இஸ்ரவேல் கோத்திரத்தில் ஏராளமான இறை வணக்க வழிபாடுகளில் மூழ்கி வாழ்ந்து வந்தார். அவநம்பிக்கையாளர்களுக்கு எதிராக அன்னார் மிக தைரியத்துடன் பல போராட்டங்களை மேற்கொண்டு வந்தார்.

அவநம்பிக்கையாளர்கள் அன்னாரை மிகவும் அஞ்சிகின்றவர்களாக காணப்பட்டனர். அத்தகைய ஆற்றலினை அல்லாஹ் அன்னாருக்கு அளித்திருந்தான். அதனால் அவநம்பிக்கையாளர்களின் சேனையால் அவரை வீழ்த்தக் கூட முடியவில்லை. இத்தகு தன்மையினையுடைய சம்சூண் (ரலி) அவர்களின் வாழ்க்கையில் சுவாரசியமான ஒரு கதையுள்ளது. இ∴து அன்னாருக்கும் அன்னார் அல்லாஹ்வின் மீது வைத்துக் கொண்ட நம்பிக்கைகும் தொடர்புடையதாகும். அதாவது அன்னாரின் தைரியம் மற்றும் ஆற்றலைக் குறித்ததாகும். ஆயிரம் மாதங்கள் கூட ஒரே நிலையில் ஜிகாத்(இறை வழியிலான போராட்டம்) செய்வதற்கு அன்னார் தயாராகயிருந்தார். அல்லாஹ்வின் தூதராகிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள், ஜிபரீல் (அலை) மூலம் இஸ்ரவேல் கோத்திரத்தைச் சார்ந்த அந்த அசாதாரணமான மனிதனின் கதையை அறிந்த போது, அன்னாரின் எண்ணம் தம் சமுதாயத்தின் மீதாகியது. ரசூல் (ஸல்) அவர்கள் சிந்தித்தார். வாழ்க்கை மிகவும் குறுகியது. சம்சூண் (ரலி) அவர்களுக்கு கிடைத்த வகையிலான அதே அருட்கொடைகளை பெறும் வாய்ப்பு தனது சமுதாயத்திற்கு கிடைக்காது என எண்ணி கவலைப்பட்டார். ஏனெனில் சம்சூண் (ரலி) அவர்களுக்கு ஆயிரம் மாதங்கள் தனது நம்பிக்கை மற்றும் பக்தியினை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான வாய்ப்பு கிடைத்தது.

இக்காரணத்தால் அல்லாஹ் தனது தூதரின் கவலைகளை நீக்கிக் கொண்டு, அன்னாரின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டவாறு அன்னாரின் சமுதாயத்திற்கு ஒரு மாபெரும் அருட்கொடையினை அளித்துக் கொண்டான். அந்த சலுகைதான் அசாதாரணமான ஒரு அறிக்கையாக கிடைத்த லைலத்துா் கதிா் எனும் இரவு. அந்த இரவில் தான் திருக் குா் - ஆனை அன்னாருக்கு இறக்கி அருளபட்ட நாள். அதாவது சற்று விரிவாக கூறினால் அல்லாஹ்விடமிருந்து உண்மையான வெளிப்பாடுகளை அவனது தூதராகிய முஹம்மது (ஸல்) அவர்கள் பெற்ற நாள் இதுவாகும்.

ரமலானின் கடைசி பத்து நாட்களில் ஒற்றையான இரவுகளில் அந்த இரவை நாம் தேடிக் கொள்ள வேண்டும். ரசூல் (ஸல்) அவர்களின் போதனைகளின் படி அதாவது 21, 23, 25, 27, 29, இந்த இரவுகளில் ஏதாவது ஒன்றில் அந்த இரவை காணலாம். அந்த இரவு மிகவும் குளிராகவோ அல்லது மிகவும் சூடாகவோ இருக்காது என்பது அவ்விரவின் அறிகுறியாகும். அந்த இரவில் நம்பிக்கையாளர்கள் திருப்தி நிறைந்த உணர்வை அடைகின்றனர்.

நான் ஒரு கணக்கீடு செய்தேன், நீங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இது மிகவும் திட்ப நுட்பமான காரியமாகவும் இருக்காது. சூர : அல் கதிா் நாம் வாசிக்கும் போது அந்த அத்தியாயத்தில் மூன்று இடங்களில் லைலத்துல் கதிா்

என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. பிஸ்மில்லாஹிரஹ்மானி ரஹீமுக்கு பிறகு 1, 2, 3 வசனங்களிலாகும் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பது. லைலத்துல் கதிர் என்ற அரபிவார்த்தையின் உருவாக்கமானது ஒன்பது எழுத்துக்கள் கொண்டது. அது மூன்று இடங்களில் கூறப்பட்டுள்ளது. ஆகவே அந்த ஒன்பதை மூன்றால் பெருக்கி கொண்டால் (9x3) 27 கிடைத்து விடும்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரும்பாலான தோழர்களும் அதாவது இப்னு அப்பாஸ் (ரலி) மற்றும் உபய்ப்னு கஆப் (ரலி) போன்றவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கின்றனர். **“லைலத்துல் கதிர் நிச்சயமாகவும் 27 – ம் இரவிலாகும். அதன் அடையாளம் என்னவென்றால், சூரியன் காலையில் எழுந்து விட்டால் அதை சுற்றி ஒளிக்கோடுகள் இருக்காது”**

(முஸ்லீம், அஹமது, திர்மிதி)

ஹஸ்ரத் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்கின்றார். அவர், நபி (ஸல்) அவர்களிடம் வினவினார். லைலத்துல் கதிர் எந்த இரவில் என்பதை நான் அறிந்து கொண்டால், நான் எந்த பிரார்த்தனையை செய்ய வேண்டும். ரசூல் (ஸல்) அவர்கள் பதிலளித்தார். அத்தகைய ஒரு இரவை நீங்கள் சந்திக்க நேர்ந்தால், இத்துவாவை அதிகமளவிற்கு செய்யுங்கள்.

**“எனது அல்லாஹ் நீ மன்னிப்பவனாகயிருக்கின்றாய். மன்னிப்பை நீ விரும்புகின்றாய். அதனால் நீ எனக்கு மன்னிப்பை அளிப்பாயாக”**

(திர்மிதி இப்னுமாஜா மிஸ்காத்)

ரமலானில் லைலத்துல் கதிர் சம்பந்தமாக பலமுறை நான் பேசியதாகும். நேரக் குறைவு காரணத்தால் இனி ஜக்காத்தைப் பற்றி சற்று பேசிக் கொள்ளலாம் என எண்ணுகின்றேன். ஏனெனில் இதுவும் மிக முக்கியத்துவம் வாய்ந்த காரியமாகும்.

ஜக்காத்து என்பது இஸ்லாமின் ஒரு தூண் ஆகும். தகுதியுள்ள ஒவ்வொரு முஸ்லீம்களுக்கும் அது கட்டாயமான கடமையாக விதிக்கப்பட்டுள்ளது. இது பக்தியின் ஒரு வழியாகும். சமுதாயத்தில் நீதியினை நிலைநாட்ட இது மிக அவசியமான ஒரு நடவடிக்கையாகும். இது இஸ்லாமின் ஐந்து தூண்களில் ஓர் தூணாகும். இது சம்பந்தமாக திருக் குர் - ஆன் மற்றும் திரு கதீஸீகளில் கூறப்பட்டுள்ளது. ஜக்காத் (தானதர்மம்) என்ற அரபி வார்த்தையின் அடிப்படையான அர்த்தம் என்பது வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் சுத்திகரிப்பு போன்றவையாகும். ஜக்காத் என்ற வார்த்தையை கொண்டு அர்த்தமாக்கப்படுவது,

நம் செல்வங்களின் ஒரு பகுதியை அல்லாஹ்வின் கட்டளைகளின் படி, அதற்கு தகுதியுடைய மக்களுக்கு வினியோகித்துக் கொள்தலாகும். 9—ம் அத்தியாயத்தில் (சூர : அத்தவ்பா) 60—வது வசனத்திலும், ஹதீஸ்களிலும் இது சம்பந்தமான கட்டளைகளும், அறிக்கைகளும் உள்ளன. ஜக்காத்து என்பது ஒரு இறைவழிபாடாகும். அதன் மூலம் முஸ்லீம்களின் செல்வம் மற்றும் ஆன்மாவானது, சுத்திகரிப்பினைப் பெற்றுக் கொள்கிறது. அதாவது செல்வங்களின் சுத்திகரிப்பு எனப்படுவது பொருளாதார வளர்ச்சிக்காக பொருள் வகைகளை நியாயமான வகையில் கைமாற்றம் செய்தலாகும். ஆன்மாவின் சுத்திகரிப்பு என்பதன் பொருளாவது வெறுப்பு, பொறாமை, சுயநலம் மற்றும் பேராசை போன்றவற்றிலிருந்து உங்கள் இதயத்தை மீட்பதாகும்.

ஜக்காத் (தானதர்மம்) என்பது முஸ்லீம் சமூகத்தின் செழிப்புக்காக திருக் குர் - ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களின் போதனைகள்ப் படி நிதி வினியோகித்தல் ரீதியாகும். மக்களின் செல்வங்களிலிருந்து ஆண்டு இறுதி கணக்குப்படி குறிப்பான ஒரு தொகையினை வசூலித்து அதை தகுதியுடைய மக்களுக்கு வழங்கி கொள்தலாகும். ஒரு முஸ்லீம் தனது குடும்பத்திற்கும் மற்று தேவைகளுக்குமான செலவு செய்தப்பின் மீதிவரும் தொகையிலிருந்தே ஜக்காத்து கணக்கிடப்படுவது. வருட முடிவில் 35 கிராம் தங்கமிருந்தாலோ அல்லது 595 கிராம் வெள்ளியிருந்தாலோ அல்லது அதற்கு சமமான தொகையினில் பணமிருந்தாலோ அல்லது பொருளிருந்தாலோ அவர் 2.5% சதமானம் ஜக்காத்து செய்ய வேண்டும். அதைப்போன்று, தன் நிலத்தின் விளைப் பொருட்களாக இருப்பினும் அல்லது கால்நடை உற்பத்தி பொருட்களாக இருப்பினும் அவ்வாறே ஜக்காத்து செலுத்த வேண்டும்.

ஜக்காத்து சம்பந்தமாக திருக் குர் - ஆனில் ஏறத்தாழ 30 இடங்களில் கூறப்பட்டுள்ளது. கீழ் காணும் வசனத்தில் கூறப்பட்டிருப்பது போன்று பல இடங்களிலும் அதனை தொழுகையுடன் சேர்த்து கூறப்பட்டிருக்கின்றது.

**“தொழுகையை நியாயமாகக் கடைப்பிடித்து, ஜக்காத்தும் கொடுத்து வருகின்றார்கள்”**

(2:278)

அனஸ் (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கின்றார்கள். இறை தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். **“மரணத்தை சந்திப்பவர்கள் அல்லாஹ்விடம் நேர்மையாகயிருந்து, அவனை மட்டும் வணங்கி அவனுக்கு இணையாக வேறு எத்தகைய வழிபாடும் செய்யாமல், தொழுகையை கடைப்பிடித்து, ஜக்காத்து**

**வழங்குவோர்களாகவும் இருப்பவர்களாயிருந்தால் அவர்கள் அல்லாஹ் விரும்புகின்ற நிலையிலான மரணத்தினைப் பெற்றுக் கொள்வார்கள்". (இப்னு மாஜ)**

திருத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், **"எவர்களையெல்லாம் அல்லாஹ் செல்வம் படைத்தவர்களாக ஆக்கியுள்ளானோ அவர்கள் அச்செல்வங்களுக்கு ஏற்றவாறு ஜக்காத்து வழங்காமலிருப்பார்களெனில் அவர்களின் விதி நாளில் அதாவது மறுமையினில் அச்செல்வமானது கொடிய நஞ்சினை உடைய ஒரு ஆண் பாம்பினைப் போல எழுந்து அவர்களின் கழுத்தினை சுற்றிப் பிடித்துக் கொண்டு அவர்களின் கன்னத்தினை தீண்டியவாறு அவர்களிடம் "நான் தான் உனது செல்வம்" "நான் தான் உனது நிதி" என்று கூறி நிற்கும்.**

(புகாரி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள், **"ஜக்காத்து வழங்காதவர்களுக்கு பல் வகையான தண்டணைகளை ஈவாக இறைவன் அளிக்கின்றான். வறுமை, வறட்சி, விபத்து போன்ற இத்தகைய தண்டணைகளுக்கு ஆளாக்காமல் எந்த மக்களையும் அவன் விட்டுவிடுவதில்லை".**

(தபறானி, ஹக்கீம், பைஹபி)

இஸ்லாமிய நெறிமுறைகளின் படி ஜக்காத் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதபடும் ஒன்றாகும். ஹஸ்ரத் அபுபக்கர் (ரலி) அவர்கள் கூறுகையில் **"தொழுகையை ஒழுங்கான முறையில் கடைபிடிக்காமலும் ஜக்காத் வழங்காமலும் இருப்பவர்களிடம் நான் போராடுவேன். இறைவன் மீது ஆணையாக சொல்கிறேன், செல்வந்தர்களிடமிருந்து கட்டாயமாக ஜக்காத்தை வசூலிக்க வேண்டும். அல்லாஹ்வின் தூதருக்கு அளிக்க வேண்டிய ஒரு சிறிய ஆட்டுக் குட்டியாக இருப்பினும் அதை அவர் வழங்காமலிருந்தால், அதனை கைப்பற்றிக் கொள்வதற்காக அவனிடம் நான் போராடுவேன்".**

(நசாயி)

ஆகவே, ஜக்காத் வழங்காதவர்கள் அவநம்பிக்கையாளர்களை போன்றவர்கள் ஆவார்கள். அவர்களை, இஸ்லாம் நம்பிக்கையினை மறுக்கின்றவர்கள் எனலாம். இஸ்லாமியத்தில் முஸ்லீம் என்னும் பெயரோடு நிலைப் பெற்றிருக்கும் ஒருவர் கட்டாயமாக ஜக்காத் வழங்க வேண்டும். அந்நபர்

பல்வகைப் பொருள் வகைகளின் உரிமையாளராகயிருந்தால், செல்வங்களை வழங்குவதற்கான வசதிகளைப் படைத்தவனாகவும் இருந்தால், நிச்சயமாக அவர் ஜக்காத்து வழங்க வேண்டும். இழந்த மற்றும் களவாடிய பொருட்களுக்கு ஜக்காத்து அளிக்க வேண்டாம். ஏனெனில் இச்செல்வம் சட்டப்படி ஒரு முஸ்லீமின் உடமைக்குட்பட்டதல்ல.

செல்வம் விரிவடைதல் என்பது வளர்ச்சியுடன் நேரடி தொடர்புடையதாகும். பொருள் வகைகளின் நிலைகளில் ஜக்காத்தை கட்டாயமாக்கிக் கொண்டது எதற்காக என்றால், அப்பொருள் வகைகள் வளர்நிலைக்கான அதாவது வளர்வதற்கான ஆற்றல் பெற்றிருப்பதால் ஆகும். ஜக்காத் வழங்கும் நிலையாக கூறப்படுகின்ற போது, வங்கி கணக்கிலுள்ள பணத்தொகை, கால்நடை உற்பத்தி பொருட்கள், செடிக்கொடி போன்ற சிறு பயிர் வகைகள் மூலம் கிடைக்கின்ற விளைப்பொருட்கள், மற்று பொருள் வகைகள் போன்றவைகள் ஜக்காத் பட்டியலில் உட்படுகிறது. அவ்வாறிருந்தும் தனிப்பட்ட தேவைகளுக்காக மாற்றி வைத்திருக்கும் பொருட்களுக்கும், வசித்து வரும் மனைகளுக்கும், வீட்டுப் பொருட்களுக்கும், வாகனங்களுக்கும் ஜக்காத் செலுத்த வேண்டாம்.

நாம் ஜக்காத் வழங்கும் போது, நாம் மிகவும் கவனமாகயிருக்க வேண்டும் என்பது மிக முக்கியத்துவம் ஆகும். அவ்வாறே ஆனால் ஜக்காத் வழங்கி கொள்ள வேண்டிய பட்டியலிலிருந்து எதையும் நாம் மறந்துவிடமலிருப்போம். ஜக்காத் அளிக்கின்ற இயல்பு நிலையிலிருந்து சற்று அளவினை அதிகரிப்பு நலமானது ஆகும். அவ்வாறு செய்வதனால் நமக்கு எத்தகைய குறவும் நேரிடாது. இன்ஷா அல்லாஹ்! ஜக்காத் வழங்குவதன் மூலம் உங்களின் எல்லா தீர்மானங்களும் முழுமை பெற்று விடும். அது மூலமாக நீங்கள் ஒரு புதிய நிலையிலான வருமானத்தின் ஊற்றாக பரிணமித்து விடுவீர்கள். அது உங்களுக்கும் உங்களின் வீட்டிற்கும் நன்மையினை விளைவிக்கும். அது மட்டுமின்றி, நீங்கள் தூய்மையை பெற்று விடுவீர்கள், உங்கள் குடும்பம் மற்றும் அனைத்து பொருள் வகைகளும் சுத்தமாகி விடும். ஆமீன் சும்ம ஆமீன்.


என் நேர்மையான, என்னை பின்பற்றுகின்ற, என் மீது நம்பிக்கை கொண்ட, அல்லாஹ்வை இதயத்தில் அஞ்சுகின்ற, அல்லாஹ்வை நேசிக்கின்ற எனது தோழர்கள் மீது லைலத்துல் கதிரின் அருட்களை பொழிவதற்காக நான் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கின்றேன். தங்களின் நம்பிக்கையில் குறைபாடுகள் நிகழ்ந்தவர்களுக்காகவும் நான் பிரார்த்தனை செய்கின்றேன். உங்கள் மீதும் அல்லாஹ் லைலத்துல் கதிரின் அருட்களை பொழிவானாக! அது மூலம் உங்களுக்கு ஒரு ஒளி கிடைத்து விடட்டும்! அது மூலம் உங்களின்

சோம்பலும் மற்றும் நிச்சயமின்மையும் விலகி விடட்டும். ஒளிமயமான ஆன்மாக்கள் உருவாகட்டும். அத்தகைய ஆற்றல் வாய்ந்த ஆன்மீக பிரகாசத்தால் அவர்கள் எழும்பி நின்று, உலகினை அல்லாஹ்வின் பால் வழி நடத்துவதற்கும் முடிந்து விடட்டும்! இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.


**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 7339689239, 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com



**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663
**Blog:** www.sahih-al-islam.blogspot.in